கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 47/2023

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 01- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புனிதா | வயது | 32 |
| கணவர் பெயர் | மாதவன் | ஜாதி | |
| தொழில் | அலுவலக உதவியாளர், விரைவு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது திருவாரூர் இபி அலுவலகம் அருகே துர்காலயா ரோட்டில் வசித்து திருத்துறைப்பூண்டி விரைவு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2022 ம் ஆண்டு ஹவுசிங் போர்டில் குடியிருந்த போது அவர் எங்கள் வீட்டிற்கு கீழ் தளத்தில் குடியிருந்தார். கடந்த 2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆஜர் எதிரி அவரது கணவரையும், என்னையும் சம்பந்தப்படுத்தி தகராறு செய்தார். கடந்த 19.01.2023 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்ற அலுவலகத்தில் நான் அலுவலக பணியில் இருந்த போது ஆஜர் எதிரி தகாத வார்த்தைகள் சொல்லி திட்டிக் கொண்டே அலுவலத்திற்குள் வந்து ஆஜர் எதிரியின் காலில் இருந்த செருப்பை கழட்டி எனது இடது தோள் பட்டையில்அடித்து விட்டார். குச்சிகாரி, தேவடியா என்று திட்டினார். இனிமேல் என் கணவரோடு போனில் பேசினால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அப்போது அலுவலகத்தில், அலுவலக உதவியாளராக இருந்த சர்மிளா என்பவரும், நீதிமன்ற நகல் ஆய்வாளர் சசிக்குமார் என்பவரும் ஆஜர் எதிரியை தடுத்து நிறுத்தி அலுவலகத்தில் இருந்து வெளியே அனுப்பி வைத்தனர்.

2) ஆஜர் எதிரி அடித்ததில் எனக்கு இடது தோள் பட்டையில் வலியும், மயக்கமும் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் நான் எனது கணவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். என் கணவர் என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அங்கு உள்நோயாளியாக 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது தாலுக்கா காவல் நிலைய போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். நான் சொல்ல அவர்கள் எழுதிக் கொண்டார்கள். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ( **புகார் வாக்கு மூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அன்றைய தினம் நான் என்ன பணியில் இருந்தேன் என்பதை காண்பிக்க ஆபிஸ் ஆடர் இருந்ததா என்றால் இருந்தது. என்னை விசாரணை செய்த விசாரணை அதிகாரி நான் என்ன பணியில் இருந்தேன் என்பதற்கான உத்தரவை கேட்கவும் இல்லை கொடுக்கவும் இல்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணிக்கு வந்ததற்கான பணி வருகை பதிவேட்டில் நான் கையொப்பம் செய்திருந்தேன் என்றால் சரிதான். என்னை விசாரணை செய்த காவல் அதிகாரி அந்த வருகை பதிவேட்டின் நகலை கேட்டு பெற்றாரா என்றால் இல்லை.

2) அன்றைய தினம் நடந்த சம்பவம் குறித்து நான் நீதித்துறை நடுவரிடமோ, தலைமை எழுத்தரிடமோ எழுத்துபூர்வமான புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்த போது நான் தாக்கப்பட்டதால் நீதிமன்ற பணிக்கு வர இயலவில்லை என அனுமதிக்கேட்டு விடுப்பு கடிதம் ஏதேனும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வழக்கு விசாரணை நடக்கும் இடம் தனியாகவும், அலுவலகம் தனியாகவும் உள்ளது என்றால் சரிதான். திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடக்கும் இடம் கீழ் தளத்திலும், அலுவலகம் முதல் தளத்திலும் உள்ளது என்றால் சரிதான்.

3) விசாரணை அதிகாரியிடம் வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என்று சொல்லி உள்ளேனா என்றால் அலுவலகத்தில் நடந்ததாக சொல்லி உள்ளேன். அங்கு தான் தலைமை எழுத்தர் இருந்தார் என்றால் சரிதான். தலைமை எழுத்தருக்கு நடந்த சம்பவம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு உடம்பின் புஜ பகுதிக்கும், பின் பகுதிக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு மயக்கம் வந்து எப்போது தெளிந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. மருத்துவரிடம் நான் தகவல் தெரிவிக்கும் போது நிதானத்துடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது எனது தோள் பட்டையில் காயங்கள் இருந்தது என்றால் சரிதான். இரத்தம் தோய்ந்த

காயமா வீக்க காயமா என்றால் வீக்க காயம் இருந்தது. செருப்பால் அடித்தால் அந்த செருப்பின் பதிவுகள் அடிக்கும் இடத்தில் இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு இருந்த பதிவுகளை நான் மருத்துவரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன்.

4) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி தடை செய்யப்பட்ட பகுதி அதில் வேறு நபர்களோ, பொது நபர்களோ உள்ளே வரமுடியாது என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் ஆவணங்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு பணியாளர் பாரா இருப்பது வழக்கம் என்றால் நைட்டு வாட்ச் மேன் இருக்கிறார், பகல் வாட்மேன் இல்லை. இவ்வழக்கின் எதிரி நான் சொல்வது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் என்னை தாக்கவும் இல்லை, திட்டவும் இல்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற ஊழியர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது தவறான புகார் கொடுத்து தவறான வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் நான் தலைமை எழுத்தருக்கும், நீதித்துறை நடுவருக்கும் தகவல் கொடுத்திருப்பேன் என்றும், சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால்தான் தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் அலுவல் பணியில் இருந்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. எதிரியின் கணவருடன் தொடர்பில் இருப்பதாக கூறி எதிரி என்னிடம் பிரச்சனை செய்ததாக கூறுவதும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.

5) எனக்கும், எதிரிக்கும் இருந்த பிரச்சனை ஹவுசிங் போர்டில் குடியிருப்பவர்களுக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புகார் சங்கதிகள் தவறாக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு அனுசர்னையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் அன்றைய தினமே 19.01.2023ம் தேதி மதியத்திற்குள் வாக்குமூலம் எழுதி வாங்கிக் கொண்டார்கள். மறுநாள் 20ம் தேதியும் என்னை விசாரணை செய்தார்கள்.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.